Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

54

# மராட்டியர் கால ஆடற்கலை

**துஸ்யந்தி சுகுணன்**

**விரிவுரையாளர், நடனத்துறை, இராமநாதன் நுண்கலைக் கழகம்,**

**யாழ்ப்பணப் பல்கலைக்கழகம், மருதனார்மடம்.**

**ஆய்வுச்சுருக்கம்**

நாயக்கர்களை அடுத்து தஞ்சை மண்ணை ஆண்டவர்கள் மராட்டிய மன்னர்கள். தஞ்சை நாயக்க மன்னர்களுக்கும், மதுரை நாயக்க மன்னர்களுக்கும் இடையேயான போரின் விளைவு மராத்திய மன்னர்களின் ஆட்சி தஞ்சையில் ஏற்பட வழிகோலியது. தமிழகத்தின் தென்பகுதியான தஞ்சையைத் தலைமையிடமாகக் கொண்டு திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளை கி.பி 1676 முதல் 1850 வரையில் ஏறத்தாழ 180 ஆண்டுகள் ஆட்சி செய்தவர்கள் மராட்டிய மன்னர்கள் ஆவார்கள். அன்று தமிழ் நாட்டை ஆண்ட நாயக்கர்களுக்கிடையேயான பிரச்சனை காரணமாக ஏகோஜி தஞ்சையின் முதலாம் மன்னராக 1676 ஆண்டு முடிசூடிக் கொண்டார்.

மராட்டிய மன்னர்கள் காலத்தில் தஞ்சை சமூக நிலவரத்தினை நோக்கும் போது இக்காலத்தில் பொருளாதார வீழ்ச்சி ஆரம்பித்துவிட்டாலும் அவ்வீழ்ச்சி கலாச்சார சிறப்பிற்கோ, பண்பாட்டிற்கோ, வளர்ச்சிக்கோ எத்தகைய பாதிப்பினையும் ஏற்படுத்தவில்லை. மாறாக வளர்ச்சி கண்டது என்பதே பொறுத்தமானது. மராட்டிய மன்னன் சகஜியின் காலத்தில் தமிழிசையும், கர்நாடக இசையும் நன்கு வளர்ந்தன. தேவாரம், திருப்புகழ், திருவாய்மொழி, கீதகோவிந்தம், புரந்தரதாசரின்பதங்கள், சூளாதிகள், கீதங்கள் முதலிய மரபுகள் போற்றப்பட்டன. இக் காலத்தில் ஆலயத்தின் பலபகுதிகளில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. கலைகள் ஏற்றம் பெற்றன. சிற்ப, சித்திர, நாட்டிய, இசை போன்ற கலைகள் வளர்ச்சியடைந்தன.

1676ல் தஞ்சையில் ஏற்பட்ட மராத்தய மன்னர்களின் ஆட்சி ஏறத்தாழ 180 வருடங்கள் நிலைத்தது. இக் காலப்பகுதியில் மராத்தய மன்னர்களின் கலைப் பங்களிப்பு சிறப்பித்துக் கூறக்கூடிய வகையில் மிளிர்ந்தது எனலாம். மராத்தியர்களின் காலப்பகுதியில் ஆட்சி புரிந்த 10 மன்னர்களும் கலைப்பங்களிப்பு நல்கி ஆடற்கலை;கும் சிறப்புச் செய்து ஆடற்கலையின் மரபுத் தொடர்சியில் ஓர் புதிய அத்தியாயத்திற்கு வழிவகுத்தார்கள். அவர்களின் மொழி மராத்தியாக இருந்த போதிலும் ஏற்கனவே நாயக்க மன்னர் காலத்தில் இருந்துவந்த தெலுங்கு மொழியினையே அரசவை மொழியாகக் கொண்டு மொழிகடந்த கலைப்பணி ஆற்றினார்கள். பழங்காலம் முதல் மக்களது பண்பாட்டு வளர்ச்சியில் மரபுத் தொடர்ச்சியாக நிலவி சிறப்பிடம் பெற்றுவந்த இசையும், நாட்டியமும் மராத்தியர் தஞ்சையை ஆண்ட ஏறத்தாழ 180 ஆண்டு காலத்தில் பல நுணுக்கங்களையும், சிறப்புக்களையும், அழகியல் அம்சங்களையும் கொண்டு சிறப்பெய்தியது.

அவர்கள் இசைக்கலை வளர்ச்சி நோக்கில் சங்கீத மஹாலையும் நாட்டியக்கலையும்;, நாடகக்கலையும் மேன்மையுற வேண்டி நாடகசாலைகளையும், ஏட்டுச்சுவடிகளையும் புத்தாக்கங்களையும் பேணி அறிவியல் ஆக்கங்களைப் பாதுகாக்க சரஸ்வதி மஹால் படிப்பகத்தையும் உருவாக்கினார்கள். அன்றைய சூழல் கலைகளையும் புலமையாளர்களையும் மாபெரும் விழாக்கள் மூலம் கௌரவிக்கும் செயற்பாட்டினை கொண்டிருந்தது. எனவே மன்னர்கள் செவ்வனே இசைக்கலையையும், நடனக்கலையையும் வளர்த்தனர்.

**சகஜி மன்னனின் ஆடற்கலைப்பணி**

ஏகோஜி மன்னனை தொடர்ந்து அரியணை ஏறிய சஹாஜி மன்னன் அபிநவபோஜன் என்னும் பட்டத்தினைப் பெற்றவன். சகாஜிமன்னன் இலக்கியத்திற்கும், கவித்துவத்திற்கும், இசைக்கும் அதன்வழி ஆடலுக்கும் ஆற்றிய பணி மகத்தானது. ஏழாம் நூற்றாண்டின் மகேந்திரபல்லவ மன்னனின் கலைப்புலமை, இலக்கியப்புலமை, பன்மொழிப்புலமையைப் பறைசாற்றும் சகலதுறைப் பாண்டித்தியத்தை வெளிப்படுத்தும் விருதுப்பெயர்கள் போல் சகாஜியும் பல்துறை விற்பன்னன் என்றவகையில் பல்துறைப் பாதுகாவலனெனப் பட்டப்பெயர்கள் சூட்டப்பெற்றவன்.

இவர் கலை, இலக்கியம் ஆகியவற்றில் மிகுந்த புலமை பெற்றிருந்தான். இவரது காலம் தஞ்சை வளர்த்த கலை வரலாற்றில் ஒரு முக்கியமான காலம் எனலாம். இவர் தனியே புலவனாக மாத்திரமன்றிப் பன்மொழி புலவனாகவும்,; இசைஞானம் நிரம்பப் பெற்றவனாகவும், வாக்கேயக்காரனாகவும், நாடகம் நாட்டியக்கலைகளில் விற்பன்னனாகவும், விளங்கியமை அவர் யாத்த நூல்கள், நாட்டிய நாடகங்கள், பதங்கள், பிரபந்தங்கள் வழி அறியக்கிடக்கிறது. இவரது சங்கீதம் மற்றும் சாகித்திய நூல்கள்வழி அக்காலத்தில் ஆடற்கலை மற்றும் இசைக்கலை பெற்றிருந்த சிறப்பான நிலையையும் உணரமுடிகின்றது. இவரது படைப்புக்களில் பதம,; பிரபந்தங்கள், நாடகங்கள், கவிதை என்பன அமைவதோடு அறிவியல் அடிப்படையிலமைந்த ராக லட்சணம் எனும் இசை இலக்கண நூலும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அது மட்டுமல்லாமல் சகஜி மன்னர் ராஜகவியாக திகழ்ந்தும் மற்ற அரசவைப் புலவர்களையும் ஆதரித்தவர். இம்மன்னரை பாட்டுடைத்தலைவராக வைத்து பலமொழி சாகித்தியங்களும், இசை நாட்டிய நாடகங்களும் பல புலவர்களால் இயற்றப்பட்டன.

**சகஜி மன்னன் படைத்த பிரபந்தங்கள்**

சகஜி மன்னன் மராட்டி, தெலுங்கு மொழிகளில் ஏராளமான பத சாகித்தியங்களை இயற்றியுள்ளார். இவர் சப்தம் எனும் சொற்கட்டுகளை இயற்றுவதில் கை தேர்ந்தவர் எனக் கூறப்படுகின்றது. கேய நாடகம் என்னும் இசை நாட்டிய நாடக வடிவை புதியதாகவும், புதுமையாகவும் உருவாக்கி வளர்த்து பிரபல்யமடையச் செய்தது இவரது ஆட்சிக் காலத்தில் வரலாற்றுச்சிறப்புமிக்க கலைப்பணியாகக் கருதப்படுகின்றது. விஷ்ணு பல்லக்கிசேவா பிரபந்தம், சங்கரபல்லக்கி சேவா பிரபந்தம், பஞ்சரத்தின பிரபந்தம், தியாகராஜ வினோத சித்திர பிரபந்தம் என்பவை கேய நாட்டிய நாடகத்தினை பிரதிபலிப்பவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்நாட்டிய நாடகமானது இலக்கியம்,

இசை, நாட்டியம், நாடகம் ஆகியன சமமாக அமைந்து புதிய முறையில் புதிய பரிணாமத்தில் கலைச்சிறப்பு பெற உருவாக்கப்பட்டவையாகும். இவை பக்தி மற்றும் சிருங்காரம், வைராக்கியம் ஆகிய கருக்களை வெளிப்படுத்தும் ரக்தி மற்றும் கன ராகங்களில் அமைந்தவை.

இவருக்கு முற்பட்டகால (நாயக்கர்கால)த்தில் ஆட்சியில் இருந்த ரகுநாத நாயக்க மன்னரும் பிரபந்த வகைகளை படைத்தளித்திருந்தாலும் அவற்றில் புதிய கலை நுட்பங்களை புதிய பரிணாமங்களை கொணர்ந்து சிறப்படையச் செய்த பெருமை மராட்டிய மன்னரான சஹாஜி மன்னரையே சாரும் எனலாம். இவர் பிரபந்த முறையையும், யட்சகான முறையையும் ஒருங்கிணைத்து த்ரிஷ்ய காவியம் எனும் புதிய வடிவை உருவாக்கியவர். இவ் த்ரிஷ்ய காவியத்தின் சிறப்புத்தன்மை என்ன என நோக்கினால் அதில் இரு கலை வடிவங்கள் சங்கமிப்பதுடன் சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய இரு மொழிகளும் இணைந்து இசைக்கப்படுவனவாயும், ஆடலுக்குரிய நிருத்த, நிருத்திய அம்சங்கள் நிறைந்து ஆடல் முக்கியத்துவம் பெறுவதாயும் அமைவதாகும்.

**பல்லக்கிசேவா பிரபந்தம்**

கேய நாடகங்களில் மிகவும் தொன்மையானதாகக் கருதப்படும் பல்லக்கிசேவா பிரபந்தம் தெலுங்கு மொழியில் அமைந்திருந்தாலும் தமிழகத்தில் திருவாரூரில் வீற்றிருக்கும் தியாகேசப்பெருமானை சித்தரித்து அவரது வழிபாட்டை குறித்து அமைந்த இசை நாட்டிய நாடகம் என்பது குறிப்பிடத்தக்கது. பள்ளியறைக்கு தியாகேசர் வராமையால் வருத்தமுற்று நின்ற பார்வதிதேவியின் துன்பம் போக்க தோழியர் தியாகரிடம் தூது செல்கின்றனர். தோழியரின் வேண்டுகோளுக்கிணங்க தியாகப்பெருமான் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அமர்ந்து முன்னே செல்லும் தோழியரின் இசையுடன் இணைந்த நாட்டியத்தினை களித்துக் கொண்டே பள்ளியறை செல்வதை இந்நாட்டிய நாடகம் விவரிக்கின்றது. பல்லக்கி சேவா பிரபந்தத்தில் முக்கியமாக குறிப்பிடப்படுவது பல்லக்கி தூக்கிகள் தாளம் தப்பாது எடுத்து வைக்கும் சீரடிகள,; நாட்டிய அசைவுகள் இசை நாட்டிய நாடகத்தில் தெளிவாக விளக்கப்பட்டிருப்பதாகும். இந்நாட்டிய நாடகமானது சகஜி மன்னன் காலத்திலிருந்து திருவாரூரில் நாட்டிய தாரகைகளால் நடிக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஒவ்வொறு வெள்ளிக்கிழமையும் தியாகப்பெருமான் பள்ளியறைக்கு பல்லக்கில் செல்லும்போது இந்த இசை நாட்டியம் அபிநயித்து நடிக்கப்பட்டிருக்கின்றது என அறியப்படுகின்றது. பல்லக்கிற்கு முன்பாக பக்கத்திற்கு பதினாறு பேராக ஆரணங்குகள் இருபக்கமும் நின்று கொண்டு பதியங்களையும், தருக்களையும் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் செல்வார். இவ்வாறு இந்த நாட்டிய நாடகம் தொடர்ந்து நடைபெறுவதற்காக சகஜி மன்னன் 10 வேலி நிலத்தினை ஆடல் மகளீருக்கு மானியமாக அளித்துப் போற்றினான் என்ற செய்திகள் இம்மன்னன் ஆடற்கலையில் கொண்ட ஈடுபாட்டினை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**விஷ்ணு பல்லக்கி சேவைபிரபந்தம்**

இனிய ஓசைநயம் பாடல்கள், ஆடல்கள் என்பவற்றுடன் பெண் தெய்வமாகிய லட்சுமியை பிரபந்த நாயகியாகக் கொண்டு தெய்வத்திரு அமைந்த பல்லக்கினை சுமந்து செல்வதே விஷ்ணு பல்லக்கி

சேவையாகும். அதாவது இறைவன் திருவீதி உலாவருவதை, பல்லக்கில் பவனி வருவதை அழகாக சித்திரிப்பதே இப்பிரபந்தமாகும். எனவே பல்லக்கி சேவா பிரபந்தங்கள் அன்றைய காலகட்டத்தில் தஞ்சை மாவட்டத்தில் கோயிலில் சிறப்பிடம் பெற்றிருந்த பல்லக்கு சேவையை சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றதோடு கோயிற் செயற்பாடுகளில் ஆடல் பெற்றிருந்த சிறப்பினையும் எடுத்தியம்புகின்றது.

**பஞ்சரத்தின பிரபந்தம்**

பஞ்சரத்தின பிரபந்தமானது ஐந்து ரத்தினங்களான ஐந்து நபர்களைக் கொண்டு(ஆடல் நங்கை இருவா,; நட்டுவனார், செஞ்சு குறவர், பணியாள்) இறைத்துவ இசையுடன் நடனமாடுவதை விளக்குவதாக அமைந்துள்ளது. சிறந்த தாள லயத்தினை கொண்டமைந்த இவ் நாட்டிய நாடகத்தில் கோர்வை, ஜதி, கணபதி கௌத்துவம், சலாம்தரு, அபிநயபதம், ஜக்கினிதரு போன்றன அமைந்து கன நாட்டியத்தினை தன்னகத்தே கொண்டு சிறப்புப் பெறுகிறது. அதாவது இப்பிரபந்தமானது தியாகேசர் நாட்டியாஞ்சலியாக அமைக்கப்பட்ட பரதநாட்டிய மரபினைக் காட்டும் நாட்டிய நாடகமாகும்.

**விநோத சித்திர பிரபந்தம்**

விநோத சித்திர பிரபந்தம் பெயருக்கேற்ப விநோதமான முறையில் சமஸ்கிருதம், மராத்தியம், தெலுங்கு, தமிழ் ஆகிய நான்மொழிப்பாடல்களையும் தன்னகத்தே கொண்டு மணிப்பிரவாள பிரபந்தம் என அழைக்கப்படுகின்றது. இந்நாடகம் திருவாரூர் தியாகேசப்பெருமானை தில்லை நடராஜராக உருவகித்து அவருக்கே சமர்ப்பணம் செய்யப்பட்டதாக விளங்குகின்றது. சிவபெருமானுக்கும், ( இங்கு தியாகேசர்) காளிக்கும் இடையே சொற்போர் நிகழ்கின்றது. அவ் சொற்போர் யாதெனில் இறைவன் முன் ஆடும் தேவ நடனம், மன்னர் முன் ஆடும் ராஜ நடனம், மக்கள் முன் ஆடும் தேசி நடனம் என்பவற்றில் எது சிறந்தது என்பதாகும். இதில் தேசி நடனமே சிறந்தது என முடிவு செய்து அந்நடனத்தில் போட்டியைத் தொடங்குகிறார்கள். போட்டியில் பார்வதி தோற்பதாக கதை அம்சம் காணப்படுகின்றது. இவ் நாட்டிய நாடகமானது சங்கர காளீ சம்வாத நடனம் எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்வாறு அவர்கள் போட்டியிட்டு ஆடுவதற்கு 55 தருக்களை மன்னர் சஹாஜி உருவாக்கியுள்ளார். இவ் ஐம்பத்தைந்து தருக்களில் விலங்கு, பறவை, மலர்கள், மக்கள் என பலவகைப்பட்ட பாத்திரங்களை படைத்துக் காட்டியிருப்பதால் பலவித ஹஸ்த, அபிநயங்களைச் செய்வதற்கு வாய்ப்பேற்படுகின்றது. இவற்றில் சப்தசாகர சூலாதி பிரபந்த லீலா தருவானது ஏழ்வகை ராகங்களையும், சூலாதி சப்த தாளத்தையும் கொண்டது. இன்னோர் தருவானது முப்பது வகை தாளங்;களையும் அவற்றின் பயன்பாடுகளையும் விளக்குகின்றது. நடனத்தை இயக்குபவரும், ஆடுபவரும் ஆழ்ந்த அறிவாற்றலும் முதிர்ந்த அனுபவமும் பெற்றிருந்தாலன்றி இந்நாடகத்தில் இடம் பெற்றுள்ள சிறப்பான பல்வகைப் பாடல்களுக்கு ஆடுதல் கடினம் எனக் கூறுவதற்கேற்ப இவ் நடன நாடகம் சிறப்பாக அமைந்திருப்பது குறிப்பிட்டுக் காட்டத்தக்கது.

**பிரபந்தம்**

சகாஜி மன்னன் பிரபந்த வகை நடனவகைகளை இயற்றி அக்கால இசை, ஆடல், நாடகம் போன்ற கலைகளின் சிறப்பினையும் அவற்றில் பலவித புதுமைகளையும் புகுத்தி சாதனை படைத்துள்ளான். இங்கு பிரபந்தம் என்றால் என்ன என்பதை நோக்குவது முக்கியமானதாகும். மக்கள் மத்தியில் விளங்கும் புராணநிகழ்ச்சி அல்லது இலக்கிய வர்ணனையின் அடிப்படையில் அமைந்ததே பிரபந்தமாகும். இதில் ஆறுவகை தாதுக்களும் நான்கு அங்கங்களும் அமைந்திருக்கும் என்பது பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. 16ம் நூற்றாண்டில் காதல் உணர்வினைக் கூறும் காவியமே பிரபந்தம் எனக் கருதப்பட்டது. கிருத்தி, கீர்த்தனம் ஆகிய புதுவகை பாவகைகளின் தோற்றத்தினை அடுத்து பிரபந்தம் எனும் இசைப்படைப்பு வேரூன்றத் தொடங்கியது எனவும் சஹாஜி மன்னர் காலத்தில் மக்களிடையே செல்வாக்குப் பெற்று திகழ்ந்தது எனவும் அறிய முடிகின்றது. சஹாஜி மன்னர் பிரபந்தத்தில் யட்சகான வகையை இணைத்ததன் மூலம் நாட்டிய நிருத்திய அம்சங்கள் அதிகளவு இடம் பெற வழிவகுத்தார் எனலாம். பிரபந்தமானது இதிகாச புராண நிகழ்ச்சிகளின் அடிப்படையில் அமையும்போது ப்ராக்யார்த் பிரபந்தம் எனவும், கவிஞன் கற்பனை வளத்தோடு இயற்றும் காவியமலர் உத்பதியபிரபந்தம் எனவும், இதிகாச புராண கதைகளின் தளத்தில் கிளைக்கதைகளாய் தமது கற்பனையில் உதித்தவற்றை இணைத்து கவிஞன் படைக்கும் பிரபந்தம் மிஸ்ர பிரபந்தம் எனவும் அழைக்கப்பட்டன. இவ் மிஸ்ர பிரபந்தமே 16ம் நூற்றாண்டில் மக்களிடையே பிரபல்யம் அடையத் தொடங்கியது எனப்படுகின்றது. பெரியப்பா கவி உருவாக்கிய “சிருங்கார மஞ்சரி சகாஜியம்”; என்ற நாட்டிய நாடகத்தின் கதாநாயகனாக அமைந்து சிறப்பித்தவர் சகாஜியே. சகஜி மன்னர் வெள்ளிக்கிழமை தோறும் சாமி புறப்படும் போது சேவாப்பிரபந்தம் என்னும் நாட்டிய நாடக நூலை அடிப்படையாகக் கொண்டு ஆடிக்கொண்டுவரும்படி செய்திருக்கின்றார் போன்ற செய்திகள் அக்கால மன்னர்களின் கலையார்வத்தினை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது எனலாம்.

**மராட்டியர் காலத்தில் பத உருப்படி**

பரத நாட்டியத்தில் நிகழ்த்தப்படும் பதம் எனும் உருப்படி முற்காலத்தில் பொருள் பொதிந்த சாகித்தியதாத்து முழுவதையும் விளக்க பயன்பட்டுள்ளது. ஆனால் தற்காலத்தில் உணர்வுகளின் வெளிப்பாட்டினை உணர்த்தும் காதல்வகையாகவே பதம் பயன்படுகின்றது. 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த சேஷத்ரய்யர் இயற்றிய கிருஸ்ணன் மீது அமைந்த பதங்கள் மதுர பக்தியைக் கொண்டமைந்து நாயகியின் பல்வேறு வடிவங்களை வெளிப்படுத்தும் திறமைமிக்கவையாகக் காணப்பட்டன. இவரை பின்பற்றி சஹாஜி மன்னன் பலவகையான பதங்களை இயற்றியுள்ளார். இவற்றினை சஹாஜி மன்னன் நாட்டியத்திற்காகவே படைத்தளித்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றில் பக்திவகையில் அமைந்த தியாகேசர் பேரில் அமைந்த பதங்கள் அபிநயத்திற்குகந்தவையாகக் காணப்படுகின்றன. சஹாஜி மன்னன் 22 இசைநாட்டிய நாடகங்களையும் 208 பதங்களையும் இயற்றியுள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. இவன் இயற்றிய

பதங்களை கீழ் காணும் வகையாகப் பிரிக்கலாம்.

பக்திப்பதங்கள் - 50 பாவப்பதங்கள் - 05 வைராக்கியப்பதங்கள் - 09 சிருங்காரப்பதங்கள் - 103 ஹாஸ்யப்பதங்கள் - 14 நீதிப்பதங்கள் - 24 மங்களப்பதங்கள் - 03 என்பவையாகும்.

**மராட்டியர் காலத்தில் யட்சகானம்**

யட்சகானம் என்பது ஒருவகைக் கூத்து. யட்சர்- காந்தர்வர். யட்சர் பாடிய பாடலிலிருந்து பிற்காலத்தில் இசை மற்றும் நடனம் மற்றும் வசனங்களோடு நன்கு பொருந்திய இலக்கிய வகையைச் சார்ந்த யட்சகான நாடகம் தோன்றியது என முனைவர் எஸ். சீதா அவர்கள் குறிப்பிடுவார்கள். இது கல்வியறிவற்ற பாமரமக்களின் செப்பனிடாத சாதாரண தெருக்கூத்துப் பாணியில் அமைந்திருந்தது. இதனை சீரமைத்து அரசஅவையில் மன்னர் மற்றும் அவரது அவையினர் முன்னே இடம்பெறும் அளவிற்கு இலக்கியதரம் உயர்த்தப்பட்டு இக்காலத்தில் (மராட்டியர் காலத்தில்) நிகழ்த்தப்பட்டமை அறியமுடிகின்றது. அதாவது இக்கூத்தானது இலக்கியம், இசையின் ஆழம், நடனத்தின் நேர்த்தி ஆகிய மூன்று கூறுகளும் சமச்சீராகக் கலந்து மக்கள் மனங்கவரும் வண்ணம் மராட்டியர் காலத்தில் படைக்கப்பட்டமை அறியப்படுகின்றது. இவற்றில் சந்திர சேகர விலாசநாடகம் என்பது சிறந்த யட்சகானநாடகத்திற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவ்வாறாக நாயக்கர் காலத்தில் தொடக்கி வைத்த யட்சகானமரபு மராட்டியர் காலத்தில் வீறுநடை போட்டு வளர்ந்து புதுப் பொலிவு பெற்று செழிப்புற்றது எனலாம்.

**மராட்டியர் காலத்தில் குறவஞ்சி**

மராட்டியர் போற்றிய ஆடல் வகைகளில் சிறப்புவாய்ந்த நாட்டிய நாடக வகையைச் சார்ந்ததாக விளங்கும் கலைவடிவம் குறவஞ்சியாகும். இயற்சிறப்பும், இசைச்சிறப்பும், நாடகச்சிறப்பும,; நாட்டியச்சிறப்பும் அமைந்து பாமரமக்களின் பக்தி வழிபாட்டினையும் மற்றும் மண்ணின் சிறப்பு, நாட்டின்சிறப்பு, இறைசிறப்பு, அரசர்களின் சிறப்பு, குரவர்களின் சிறப்பு, என பலதிறம்பட்ட சிறப்புக்களையும் எடுத்து விளக்குவதாய் காதல் சுவையும் கலந்து அமைந்த பல்சுவைமிக்க ஆடலாக அமைகிறது குறவஞ்சியாகும். இங்கு இறைவன் மீதுள்ள பக்தி என்னும் உயர்ந்த பேரின்பக் காதல் மற்றும் மனிதர்களுக்கிடையான காதல் ஆகியன கலவையாக அமைவது பொதுவாகக் காணப்படும் தன்மையாகும். பெரும்பாலான குறவஞ்சி நாடகங்கள் இறைவர் பேரில் இயற்றப்பட்டிருக்கும். எனினும் மன்னர்கள் பேரில் அமைந்த குறவஞ்சி நாட்டிய நாடகங்களும் உள என்பது குறிப்பிடத்தக்கதாகும். பெரும்பாலான குறவஞ்சிகள் மன்னர்களது பேராதரவினால் உருவாக்கப்பட்டவை எனினும் புலவர்கள் மனத்தில் விளைத்த இறை பக்தியே இந்நாட்டிய நாடகங்கள் உருவாக வழிசமைத்தன எனலாம். மராட்டியர் காலத்திலும் அதற்கு பின்வந்த காலத்திலும் (18ம் 19ம் நூற்றாண்டுகளில்) நூற்றுக்கு மேற்பட்ட குறவஞ்சி நாட்டியநாடகங்கள் இயற்றப்பட்டதாக அறியப்படுகின்றது. மராத்திய மன்னர் இரண்டாம் சிவாஜியின் காலத்தில் உருவாக்கப்பட்ட சிக்கில் நவநீதேஸ்வரர் குறவஞ்சியானது நடன ஆசிரியர் பொன்னையாப்பிள்ளை என்பவர் குறித்த குறிப்பை பதிவுசெய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

நாயக்கர் காலத்தில் தோற்றம் பெற்ற குறவஞ்சியில் இருந்து வேறுபட்டு மராட்டிய கால குறவஞ்சி தருக்கள், சொல்லுக்கட்டுகள் ஆகியன நிறைந்து நடன அம்சங்கள் அதிகம் கொண்டதாக நளினமிகு நடனத்திற்கேற்ற ஜதிக்கோர்வைகளின் இடைச்செருகலாய் சாகித்தியங்கள் அமைக்கப்பெற்று விளங்குகின்றமை அறியப்பெறுகின்றது. மராத்திய காலத்திய குறவஞ்சிகளில் சஹாஜி ராஜா குறவஞ்சி, தியாகேசக் குறவஞ்சி, வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி, குற்றாலக்குறவஞ்சி ஆகியன பிரசித்தி பெற்றவையாக விளங்குகின்றன. சகஜி மன்னன் காலத்தில் இயற்றப்பட்ட சிறந்த நாட்டிய நாடகம் தியாகேசர் குறவஞ்சியாகும். இக்குறவஞ்சி நாட்டிய நாடகம் திருவாரூர் தியாகேசர் கோவிலிலுள்ள தேவாசிரிய மண்டபத்தில் பங்குனி உத்தரத்தின்போது பல ஆண்டுகளாக நடத்தப்பட்டமையை அறியமுடிகின்றது. இதே போல் தஞ்சை பெருவுடையார் கோயிலில் சரபேந்திர பூபால குறவஞ்சி நிகழ்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனவே மராட்டியர் காலத்தில் சிறப்புற்று வளர்ந்த நாட்டியநாடகம் காணப்படுகின்றமை அறியப்படுகின்றது.

**மராட்டியர் காலத்தில் பாகவதமேளா**

நாயக்க மன்னர் காலத்தில் தமிழகத்தில மேலட்டூரில் அறிமுகமாகி பின்னர் மராட்டிய மன்னர் காலத்தில் சிறப்பாக போற்றப்பட்ட கலை பாகவதமேளாவாகும். தங்களைப் படைத்த இறைவனை பக்திப் பரவசத்தோடு துதித்தல் ஒன்றே இந்நாடகத்தின் கோட்பாடு. எனவே இந்நாடகங்கள் கோயில் உட்பிரகாரங்களில் மட்டுமே ஆடப்பட்டது. இது நிருத்த, நிருத்திய, நாட்டிய பண்பிணை உள்ளடக்கிய நாட்டிய நாடக அமைப்பினைக் கொண்டு விளங்குகின்றது எனலாம். இதனால் இது நிருத்திய நாட்டிய நாடகம் என விளிக்கப்பட்டது. இதில் தோடயமங்களம் எனும் சொற்கட்டுகளுடன் அமைந்த ஸ்லோகம் இறைவாழ்த்துப்பாடலாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. சஹாஜி மன்னர் கிரிராஜ கவி என்னும் கவிஞனுடன் இணைந்து 32 பாகவதமேளா நாடகங்களை படைத்து புகழ் ஏய்தியுள்ளார். தமிழகத்தில் இத்தகைய காலத்தில் சிறப்புப் பெற்றிருந்த தனிநபர் நாட்டியங்கள் (சதிர் நாட்டியங்கள்) இந்த நாடகத்தின் பெரும் தாக்கத்திற்கு உள்ளானது எனலாம். பாகவதமேளாக்களை இயக்கிய பாகவதர்களின் கனவுப்படைப்புக்களை கோயில்களில் தேவதாசிகள் தமது நாட்டியக்கலை மூலம் அரங்கேற்றினர். அதேபோல் சதிர் நடனத்தின் இலக்கணங்களை பாகவதர் கற்று பாகவதமேளா நாட்டிய நாடகத்தினை மெருகூட்டினர். தனிநபர் நாட்டியம் பாகவதமேளா நாட்டியத்துடன் நிறைய கருத்துப்பரிமாற்றங்களையும் பெற்று சிறிது சிறிதாக வளர்ந்து இன்றைய பரதநாட்டியமாய் உருவெடுத்தது எனலாம்.

**மராட்டியர் காலத்தில் நாட்டியநாடகங்கள்**

மராட்டியர் காலத்தில் நிகழ்த்தப்பட்ட நாட்டியங்களை விட கதைக்கருவை மையமாகவைத்து படைக்கப்பட்ட வெவ்வேறு நாட்டிய நாடகங்களும் இக்காலத்தில் மேடையேறியுள்ளன. ஆண்களும், பெண்களும் இணைந்து பங்கேற்கும் இந்நாடகங்கள் மன்னர்களது அவையில் அமைந்துள்ள நிருத்த மண்டபத்தில் நடைபெற்றமையை அறியமுடிகின்றது. இந்நாடகங்கள்

மன்னனை நாயகனாக உருவகித்து அவர் புகழ்பாடும் கதையம்சம் கொண்டவையாகவும், அவனது வீரதீர செயல்களை புகழ்வதோடு மன்னனை ஆண்டவனுக்கு இணையாக உயர்த்திக் காட்டும் வழக்கமும் இருந்துள்ளது. இவ் நாட்டிய நாடகங்கள் தமிழ், தெலுங்கு, மராத்தி ஆகிய மும்மொழிகளிலும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்நாட்டிய நாடகங்கள் ஜெய ஜெய எனும் கடவுள் வாழ்த்துடன் தொடங்கி மங்களம் எனும் மக்கள் வாழ்த்துடன் முடிவடைவதுடன் மராட்டியர் காலத்தில் நிகழ்த்தப்பட்ட நாட்டிய நாடகங்களில் முக்கியமாய் அமைந்த அம்சமாக விநாயகர் தரு அமைவதைக் காணலாம். மராட்டியத்தில் விநாயகர் கடவுளை முழுமுதலாகப் பூஜித்து வழிபடும் வழக்கம் காணப்படுகின்றது. இதனால் தான் நாட்டிய நாடகங்களில் அவை தருக்களாக அமைக்கப்பட்டதுடன் அவ்வாறு விநாயகர் தருக்களை தமிழகத்தில் வேரூன்றச்செய்த பெருமை மராத்திய கவிஞர்களுக்கே உண்டு எனலாம். இக்காலத்தில் நிகழ்த்தப்பட்ட நாட்டிய நாடகங்களில் பூலோக தேவேந்திர விலாசநாடகம், சந்திரஹாச விலாசம், விஷ்ணுசஹராஜவிலாசம், சஹாஜிராஜகுறவஞ்சி, காவேரி கல்யாணம் ஆகியவை குறிப்பிடத்தக்கன.

**மராட்டியர்கால பிற நடனங்கள்**

நாட்டிய நாடகங்கள் தவிர்ந்த தனிநடனங்களும் மராத்தியர் காலத்தில் பிரசித்தி பெற்றிருந்தன. இவை அரசவைகளில் இடம் பெற்றன. இக்காலத்தில் நாட்டியக்கலையின் சிறப்புக்கள், வடநாட்டு நடனம் மற்றும் நாட்டுப்புற வடிவங்கள் ஆகியவற்றினை இணைத்து உருவாக்கப்பட்டது நாட்ச் எனப்படும் புது வடிவமாகும். இதில் நாட்ச் என்றால் ஹிந்தியில் நடனம் என்று பொருள். பல்வேறு நாட்ச் வகைகள் அரசவையில் ஆடப்பட்டமையை அறிய முடிகின்றது. அவையாவன ஜக்கினி, பேரணி, த்ருபத நாட்சி, தேசி, நவபத நாட்ச், காஞ்சின் நாட்ச், கொண்டல் கோப், கர்பாநடனம், சங்கீதமேளம், லேடீஸ் நாட்ச், திப்பிரி சித்திர நாட்டியம் என்பனவாகும்.

சகஜி மன்னனுக்கு பின்னர் வந்த மன்னர்களும் குறிப்பாக சரபோஜி மன்னர்களது காலத்திலும் தேவதாசிகள் நடனக்கலையில் ஊக்குவிக்கப்பட்டு கை தேர்ந்தவர்களாக விளங்கின்ர். சாஸ்திரீய நடனங்களைத்தவிர மோடி நடனம், குறவஞ்சி நாடகங்கள,; ஜக்கிணி, தெருக்கூத்து, பொய்க்கால் குதிரை, 50 வகையான பின்னல் கோலாட்டம், தாண்டலாஸ்ய நடனம,; தந்துக கிரி என்னும் பந்தாட்ட நடனம், ஜக்கிணி தருக்கள் போன்ற பல்வேறு நடனங்களிலும் கை தேர்ந்தவரர்களாக இவர்கள் விளங்கியமை குறிப்பிடத்தக்கது.

துளஜா 1 (1728-1736)- நடனத்தை துணைக்கொண்டு தத்துவத்தை விளக்கும் வகையில் நாட்டிய நாடகத்தினை தயார் செய்யும் பாணியை துளஜா மன்னரின் ஆட்சிக் காலத்தில் காணலாம். ராஜ ரஞ்ஜன வித்யவிலாச நாடகம் என்ற சமஸ்கிருத நாட்டியத்தை அத்வைத தத்துவத்தின் பெருமையை விளக்கும் வகையில் மன்னர் துளஜாவின் ஆக்கம் வித்தியாசமானது. அவர் தருக்கள் திவிபதாஸ், சிசமாலு போன்றவற்றையும் மற்றும் ஏனைய அமைப்புக்களையும் அறிமுகப்படுத்தினார். இவரின் மற்றுமொரு ஆர்வமூட்டும் பண்பு என்னவெனில் மோகம் என்ற மாயையை குறிப்பிடுவதற்கு மோகன ராக தருவையும் ஆனந்தத்தின் வருகையை ஆனந்த பைரவி ராகத்திலும் சங்கரனுடைய

தரிசனத்தை தெரிவிக்கும் தருவில் சங்காராபரண ராகத்தையும் முறையே அமைத்த தன்மை எனலாம்.

எகோஜி (1736-39) மன்னன் அரசவை நாட்டிய நர்த்தகி முத்துமங்காவின் கலைத்திறனை பெரிதும் போற்றுபவர். முத்துமங்காவை கௌரவிக்கும் முகமாக விலையுயர்ந்த பரிசில்கள் பலவழங்கியும், பொற்காசுகளை அளித்தும், உற்சாகம் தரும் பட்டங்களை வழங்கியும் உள்ளதாக அறியப்படுகின்றது. அரண்மனை ஆவணங்கள் மூலம் முத்துமங்கா என்பவர் ஜக்கினி, பதசாலி, துள்ளல், அபிநயம் என்ற ஆடல்களில் தலைசிறந்து விளங்கியவள் எனத் தெரியவருகின்றது. அமரசிம்ம மன்னன் கலையின்பால் உள்ள ஈடுபாட்டினால் இசை வல்லுனர்களையும், கவிகளையும், நாட்டிய கலைஞர்களையும் தன்னுடைய அரசவையில் ஆதரித்தான். கனம் கிருஸ்ணையர், கேபால கிருஸ்ணபாரதி, ஹிந்துஸ்தானி இசையாளன் ராமதாஸ் போன்ற சிறந்த கலைஞர்களெல்லாம் அவனால் ஆதரிக்கப்பட்டவர்கள்.;

இரண்டாம் சரபோஜி (1796-1832) மன்னனின் ஆட்சியின் போது அரசவைப் பொழுது போக்கு கலைஎன்ற நிலையிலிருந்து அர்த்தமுள்ள செவ்வியல் கலையாக ஆடல் நிலைமாற்றம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. அரசவை ஆஸ்தான்களான குரு சுப்பராய நட்டுவனாரும் அவரது மகன்மாராகிய தஞ்சை நால்வரும் நாட்டியத்திற்கு தேவையான அனைத்து அம்சங்களையும் ஒழுங்கமைத்து நாட்டியக் கச்சேரியினை சிறப்புற ஒழுங்கமைக்கப்பெற்ற பெறுமதிமிக்க செந்நெறி ஆடல்நெறியாக வடிவமைத்தனர்.

இக்காலத்தில் ஆடலழகி, வாய்ப்பாட்டுப்பாடுவோர், வாத்தியக்கலைஞர்கள் இணைந்த நடனக் குழு சின்னமேளம் என அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மராட்டியர் காலத்தில் நடனக்கலைக்கு பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகளாக மிருதங்கம், சங்கு, வீணை, முகவீணை, தாளம், குழல் ஆகியன அமைந்திருந்தமையை அறியமுடிகின்றது. மேலைத்தேச வாத்தியக்கருவியான வயலின் எனும் இசைக்கருவியை கர்நாடக இசையிலும் பரதநாட்டிய நிகழ்வுகளிலும் பயன்படுத்திய பெருமையும் இக்காலத்தையே சாருவதோடு அதனை பயன்படுத்திக் காட்டிய வடிவேலுவுக்கு உறுதுணையாக இருந்தவர் சரபோஜி மன்னர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மராட்டியர் காலத்தில் நாட்டியச்சிறப்புமிக்க படைப்பாளர்களும், கலைஞர்களும் பரதம் என்ற அடைமொழி கொடுத்து சிறப்பிக்கப்பட்டுள்ளமை மிகவும் குறிப்பிட்டுக்காட்டத்தக்கன. பரதம் காசிநாதன், பரதம்நாராயணகவி போன்றோர் விளங்கியுள்ளனர். இதன் அடிப்படையில் தஞ்சாவூர் நாட்டியப்பள்ளி சார்பில் மெலட்டூர் மகாலிங்கம் என்கின்ற சிறந்த பாகவதமேளா நடனக்கலைஞருக்கு பரதம் மகாலிங்கம் என்ற விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பரதம் காசிநாதன் இரண்டாம் சகஜி, முதலாம் சரபோஜி ஆகிய மன்னர்கள் பெயரில் சப்தங்கள் தந்துள்ளார். அவற்றில் சிறப்பான சொற்கட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

**மராட்டியர் காலத்து நிரூபணஆடல்**

தமிழக ஆடற்கலை வரலாற்றில் மராட்டியர் காலம் மிக முக்கியமான காலப்பகுதியாக விளங்குகின்றது. ஆடற்கலைக்கு ஒரு மார்க்க அமைப்பினை அல்லது கச்சேரி அமைப்பினை கொணர்ந்த பெருமை இக்காலத்தையே சாரும். அது மட்டுமல்லாமல் நாட்டியத்திற்கு தேவையான பல்வேறு சாகித்தியங்கள் பல மொழிகளில் இயற்றப்பட்டதோடு பல சிறந்த நாட்டிய சாகித்திய கர்;த்தாக்களும் தோன்றி நாட்டியக்கலை சிறந்திட அரிய பல படைப்புக்களைத் தந்தனர். எல்லாவற்றிற்கும் மேலாக இக்காலத்தில் நாட்டியக்கலைக்கு மன்னர்களின் பேராதரவு மிகவும் சிறந்த முறையில் அமைந்திருந்ததோடு மன்னர்களே கலை விற்பன்னர்களாக விளங்கி அரிய பல படைப்புக்களையும், நூல்களையும் உருவாக்கியதோடு நாட்டியக்கலையில் புதிய வடிவங்கள,; அழகியல் அம்சங்கள் ஆகியவற்றினை கொணர்ந்து ஆடற்கலையின் வளர்ச்சிக்கு சிறப்பாக பங்காற்றியுள்ளனர்.

இந்தவகையில் மராட்டிய மன்னர்களுள் ஒருவரான சரபோஜி மன்னர் நிரூபணம் எனும் புதியவகை நாட்டியத்தினை அறிமுகம் செய்துள்ளார். கதையின் கருவை தெளிவாக விளக்கி உரைப்பதே நிரூபணம் எனும் ஆடல்வகையாகும். அதாவது சிறந்த நடனமாக திகழத்தேவையான அனைத்து அம்சங்களுக்கும் ஏற்ற கதைக்கரு ஒன்றை விவரிப்பதே நிரூபண நாட்டியமாகும். நிரூபணம் எனும் சொல்லிற்கு கீர்த்தன் என்பதே வேர்ச் சொல்லாகும். இங்கு கீர்த்தன் என்பது தமிழில் வளங்கும் கதாகாலட்சேபம் என்ற சொல்லிற்கு இணையான மராத்திச் சொல்லாகும் என்பது குறிப்பிடத்தக்கது. நிரூபண நாட்டியத்தில் 18 வகையான நாட்டியங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். அதாவது 18வகை உருப்படிகள் சேர்ந்த ஒவ்வொரு கோர்வையும் ஒரு புராணக்கதையை வரிசையாக நிரூபணம் செய்யும்படி அமைந்திருக்கின்றமையே இந்நாட்டியமாகும். “ தமிழில் கலம்பகம் எனும் இலக்கிய வகை உண்டு. இவ்விலக்கியம் 18 வகை உறுப்புக்களை உடையது. கலம்பகத்தின் உறுப்புக்களைப் போலவே நிரூபணம் எனும் இலக்கியவகையுள்ளதால் இதனையும் கலம்பகத்தையும் ஒப்பு நோக்கி ஆய்தல் வேண்டும்”15 என முனைவர் சே.இரகுராமன் அவர்கள் குறிப்பிடுவது கவனத்திற் கொள்ளத்தக்கது. கலம்பகம் என்பது தமிழ் அகப்புற மரபுகளைக் கொண்டு பாடல் அமைப்பிலுள்ள அனைத்து பா வடிவங்களையும் கொண்டு அமைந்ததாகும். இது இறைவன் மீதும் மன்னர்கள் மீதும் பாடப்படும் இலக்கியம் எனினும் பெரும்பான்மையாக கலம்பகங்கள் இறைவன் மீது அமைந்தவையாகவே காணப்படுகின்றன. இதில் நடனத்தில் குறிப்பிடப்படும் ஒன்பது சுவைகளும் அமைந்திருப்பதுடன் தனிமனித உணர்வை வெளிப்படுத்தும் நிலையிலுள்ளன. எனவே கலம்பகத்தில் காணப்படும் இத்தகைய அம்சங்கள் கொண்டு நோக்கும் போது சரபோஜி குறிப்பிடும் நிரூபணமும் இத்தகைய அம்சங்கள் கொண்டு மிளிர்கின்றன எனலாம். சரபோஜி அமைத்த 18 வகை நாட்டியங்களாவன

1.ஜெய ஜெய 2.சரணு 3. அல 4 .சொல்லு .5. சப்தம் 6. வர்ணம் 7. பதம் 8. ஸ்வரஜதி 9. அபிநய பதம் 10. தில்லானா 11. அபிநியபதம் 12. ஜக்கினி 13. கீதம் 14. பிரபந்தம் 15. திரிபதம் 16. ஸ்லோகவர்ணம் 17. கௌத்துவம் 18. மங்களம் என்பவையாகும்.

இவ் நிரூபணங்களை கோர்வயாஞ்சே சாகித்யாஞ்சே ஜின்னா எனும் நூல் கோர்த்துத் தருகின்றது. பதினெட்டுவகை நாட்டியங்களின் பெயர்கள் சமஸ்கிருத தேவநாகரி ஏடுகளில் மட்டுமே காணக்கிடைப்பவை. கடந்தகால, நிகழ்கால புகழ்பாடும் நிகழ்ச்சிகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதே நிரூபணம். அதாவது இதிகாச புராணக்கதைகளை அல்லது கற்பனைக்கதைகளைக் கொண்டு அமைந்தவை. இவ் பதினெட்டு வகை நடனங்களும் ஒரே ராகத்திலும் ஒரே தாளத்திலும் அமைந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு ஒவ்வொரு சாகித்தியத்திலும் ஜதி வரிசைகள் மிக அழகாக அமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சாகித்தியங்கள் மகாராஷ்டிர மொழியில் அமைக்கப்பட்டிருப்பினும் இவ்வுருப்படிகள் அமைந்த ராகங்கள் யாவும் கர்நாடக ராகங்களே என்பதும், தமிழ் நாட்டு ஆடல் சம்பிரதாயத்திற்கேற்ப இவை அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதும,; சாகித்தியத்தின் சொற்களும,; பொருளும் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஒரு கதைக்கருவினை விபரிக்கும் நிருத்திய நாடகவடிவம் என இது குறிப்பிடப்பட்டாலும் தனி ஒரு நர்த்தகி அதனை ஆடுவதற்கேற்ப அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இவ் நிரூபணங்கள் ஜெய ஜெய எனும் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பித்து மங்களம் எனும் வாழ்த்துப்பாடலுடன் முடிவடைகின்றது. சரபோஜி குறிப்பிடும் 18 வகையான நடனங்களும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் மார்க்க அமைப்பு முறையை ஒத்ததாகவே பெரும்பான்மையாகக் காணப்படுவதனை கண்டு கொள்ளலாம். இவை மராத்தியில் இயற்றப்பட்டிருப்பினும் அவற்றிற்கு கர்நாடக இசையமைப்பில் அமைக்கப்பட்ட ராகமும் தாளமும் அவற்றை சதிர் நாட்டிய வகைக்கு ஏற்றவையாக மாற்றிவிடுகின்றன.

இந்தவகையில் நோக்கும் போது மராட்டிய காலத்தில் கலைவளமானது பல்லவ ,சோழ, நாயக்க காலத்தில் சிறந்து விளங்கியமை போல் செழித்து சிறந்து வளர்ந்தன. நாயக்க மன்னர்களைப்போல் மராட்டிய மன்னர்களும் இசை, நாட்டியம் ஆகிய கலைகளில் வல்லுனர்களாக விளங்கினர். இக்காலத்தில் தஞ்சை அரசவையானது இசை நாட்டியக்கலைகளை வளர்க்கும் கலைக்கூடமாக விளங்கியது. மராட்டிய மன்னர்கள் தமது மொழியான மராட்டியமொழியில் கலைப்படைப்புக்களை தந்தது மட்டுமன்றி தெலுங்கு ,தமிழ் சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிலும் கலையாக்கங்களை தந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் அரசவை, ஆலயங்கள் ஆகிய இடங்களில் விழாநாட்களில் இசை, நடனக்கலைகள் செழித்தோங்கியுள்ளன. இன்றையநாட்டியக்கலையின் சிறந்த குருக்களாக விளங்கும் சின்னையா, பொன்னையா, சிவானந்தம,; வடிவேலு ஆகிய தஞ்சை நால்வர் மற்றும் சங்கீத மும்மூர்த்திகளான சியாமா சாஸ்திரி, தியாகராசர், முத்துச்சாமி தீட்சிதர் ஆகியோர் இக்காலத்தில் தோன்றி நாட்டியம் மற்றும் இசைக்கலைக்கு புதுவடிவம் தந்தனர். இந்தவகையில் நாட்டியக்கலையும் ,இசைக்கலையும் இக்காலத்தில் புதுப்பரிணாமம் பெற்று சிறந்தன. இன்றுள்ள நாட்டிய மற்றும் இசைக்கலை அமைப்பு மராட்டியர் காலம் தந்த கலைவடிவமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. அரையர் சேவைபோல் நிகழ்ந்த ஆடற்கலை அக்காலத்தில் அரங்கக் கலையாக பரிணாமம் பெற்றது. பிரபந்தம் ,சிம்ம நந்தனம், குடக்கூத்து

போன்ற ஆடல் வகைகளுடன் திகழ்ந்த ஆடற்கலை அரங்கக்கலையாகி அதற்குகந்த உருப்படிகளாக அலாரிப்பு, கௌத்துவம், சப்தம், வர்ணம், பதம், தில்லானா, ஸ்லோகம் போன்ற அமைப்புக்களைப் பெற்றது. நாட்டியம் பயில்வதற்குரிய ஆரம்பப் பாடங்கள்(அடைவுகள்) இக்காலத்தில் முறைப்படுத்தப்பட்டன. ஆடவரும் நடனமாடும் மரபு தோற்றம் பெற்றன. எனவே இன்றைய ஆடல் நிகழ்ச்சிகளின் தோற்றுவாய் மராட்டியர் காலத்திலுதித்தது என்பது இங்கு எடுத்துக்காட்டத்தக்கது.

**துணைநூற்பட்டியல்**

முனைவர் கலாராணி தஞ்சை வளர்த்த பரதக்கலை
முனைவர் நர்மதா தமிழகத்தில் தேவரடியார்மரபு
முனைவர் சே. இரகுராமன் தமிழர் நடன வரலாறு